**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 612/2016</u>**

நாள் 09.07.2025

PW1 – ஏ.சி.சுப்பிரமணியம்

த/பெ – ஏ.வி.சென்னியப்ப கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of July 2025.)**

**<u>11–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் 9–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழிலில் எழுத படிக்கத் தெரியும். தாவா சொத்தின் பழைய சர்வே எண்.160, புதிய சர்வே எண்.64. நாங்கள் பாகம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். 11–ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் 1/18 பங்கு பாகம் உள்ளது என்றால் சரிதான். இறந்து போன 1–ம் பிரதிவாதி முருகசாமிக்கு தாவா சொத்தில் 06.03.1964–ம் தேதியிட்ட பாகசாசனப்படி பொதுவில் பாதி பங்கு பாத்தியம் என்றால் சரிதான். அந்த பாக சாசனத்தை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது தான் அந்த பாக சாசனம் என்றால் சரிதான். சாட்சி ஒப்புக்கொண்டதின் பேரில் **06.03.1964–ம் தேதியிட்ட பதிவு பாகசாசனத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்பட்டது. மீதி பாதி பாகமானது நல்லாக்கவுண்டர் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த நல்லாக்கவுண்டருக்கு கொழந்தா கவுண்டர், ராமசாமி, முத்துச்சாமி ஆகிய 3 பேரும் வாரிசுகள் என்றால் சரிதான். அதில் ராமசாமி என்பவரிடம் இருந்து தான் 1/6 பங்கு சொத்தை கடந்த 10.06.1987–ம் தேதியிட்ட பதிவு கிரைய பத்திரம் வா.சா.ஆ.1 மூலம் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். மேற்படி கொழந்தா கவுண்டர் மற்றும் முத்துச்சாமி ஆகியோர்களின் வாரிசுகள் தான்

2 முதல் 14 பிரதிவாதிகள் மற்றும் 16 முதல் 23 பிரதிவாதிகள் என்றால் சரிதான். மேற்படி பிரதிவாதிகளுக்கு வழக்கு சொத்தில் பாகம் உள்ளது என்றால் சரிதான். அந்த வகையில் 11–ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் பொதுவில் 1/18 பங்கு பாகம் கொடுப்பதில் எனக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.07.09 15:42:50 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**